# அலகு – 1

# செயலட்டை

**கட்டாய வினா**

கந்தசாமி என்பவர் தனது சொந்த சேமிப்புப் பணமான ரூபா 100 000/= கொண்டு விலங்கு வேளாண்மை தொழில் ஒன்றை ஆம்பித்தார்.இதில் மாடு, கோழி, என்பவற்றை வளர்த்து அதன் மூலம் உற்பத்திகளை தன் பிரதேசத்தில் சந்தைப்படுத்தினார்.பண்ணையை விரிவுபடுத்தும் நோக்கும் வங்கியிலிருந்து ரூபா 200 000 /= வை கடனாகப் பெற்றார்.5 ஊழியர்களையும் மாதச் சம்பளத்திற்கு நியமித்தார்.ஊழியர்களுக்கு காப்புறுதிப் பாதுகாப்பினையும் செய்திருந்தார்.பால் உற்பத்தியின் மூலம் புதிய வகைப் பானம் ஒன்றை அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் கண்டார்.அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் நூற்றுக் கணக்கான கோழிகள் இறந்தன.கந்தசாமி மேலும் வியாபாரத்தை விரிவுபடுத்துவதிலேயே ஈடுபட்டார்.

விலங்குகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொண்டார்.புதிய அரசாங்கம் கால்நடை உணவுகளுகான விலைகளைக் குறைத்துள்ளதுடன் குறைந்த வட்டிவீதத்தில் சுயமுயற்சிகளுக்கு கடன வழங்குமாறு அறிவித்துள்ளது.

கந்தசாமியின் பண்ணையால் சூழல் மாசடைவதாகவும் இதனால் மக்களுக்கு நோய் வாய்ப்பு ஏற்படவும் வாய்ப்புண்டு என மக்கள் சுகாதாரப் பரிசோதகருக்கு முறையிட்டுள்ளனர்.அதேவேளை தரமான உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் பெறக்கூடியதாக உள்ளதாக ஒரு சாரார் கூறுகின்றனர்.

மேற்கூறிய வணிகச் செயற்பாட்டினை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

I. மேற்காட்டிய வணிகத்தின் பொது நோக்கம் ஒன்றினையும் துணைநோக்கம் ஒன்றினையும் தருக?
II. இப்பண்ணை மூலம் நிறைவேற்றப்படும் தேவை, விருப்பம் ஒவ்வொன்று தருக?
III. இங்கு குறிப்பிடப்படும் பொருள் உற்பத்தி , சேவை உற்பத்தி என்பவற்றுக்கு முறையே ஒவ்வொரு எடுத்துக் காட்டை தருக?
IV. இவ்வணிகத்தின் மீத அக்கறை செலுத்தும் பிரிவினர் நால்வரைத் தருக?
V. கந்தசாமி சிறந்த முயறிசியாளன் என்பதற்கு இப்பந்தியில் குறிப்பிடப்படும் 2 விடயங்களைத் தருக?
VI. இத்தொழிலின் போது பங்களிப்பு வழங்கிய உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிடுக?
VII. இவ்வணிகத்திற்கு அரசாங்கம் வழங்கும் பங்களிப்பு 2 தருக?
VIII. இவவ்ணிகத்தின் மீது சமூகம் சார்ந்த நோக்கம் ஒன்றினையும் வாடிக்கையாளர் சார்ந்த நோக்கம் ஒன்றினையும் தருக?
IX. இங்கு உரிமையாளரின் பங்களிப்பு யாது?
X. உரிய நேரத்தில் விலங்குணவு கிடைப்பது யாருடைய பங்களிப்பாக உள்ளது?